**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.147** **நாள்: 10.09.2024**

**மாண்புமிகு மேயர் அவர்களின் 2024-25ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிவிப்பின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பணியாளர்களுக்கான முழு உடல் பரிசோதனை முகாமினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள், அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இன்று தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு மேயர் அவர்களின் 2024-25ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிவிப்பின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பணியாளர்களுக்கான முழு உடல் பரிசோதனை முகாமினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள், அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இன்று (10.09.2024) தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

**மாண்புமிகு மேயர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது :**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாண்புமிகு மேயர் அவர்களின் 2024-25ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை அறிவிப்பு-44ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும் முழு உடல் பரிசோதனை (Master Health checkup) செய்ய அறிவிக்கப்பட்டது.

இந்த முழு உடல் பரிசோதனைக்கான விரிவான நெறிமுறைகளுடன், முழுமையான ஹீமோகிராம் மற்றும் ESR, சிறுநீர் பகுப்பாய்வு, இரத்த சர்க்கரை, இரத்த யூரியா, சீரம் கிரியேட்டின் பரிசோதனை, யூரிக் அமிலப் பரிசோதனை, கொழுப்புப் பரிசோதனை, கல்லீரல் செயல்பாடு பரிசோதனை, புரதம் மற்றும் அல்புமின், ஹெபடைடிஸ் பி, இரத்த வகை பரிசோதனை, இ.சி.ஜி., மார்பு டிஜிட்டல் எக்ஸ்ரே, வயிறு மற்றும் இடுப்பு பகுதிக்கான ஸ்கேன், கருப்பை வாய் புற்றுநோய் பரிசோதனை, கண் பரிசோதனை, பொது மருத்துவப் பரிசோதனை, டிஜிட்டல் மேமோகிராம் (தேவைப்படின்) உள்ளிட்ட 16 பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் 1 முதல் 15 வரை உள்ள மண்டலங்களில் உள்ள 4,571 நிரந்தரப் பணியாளர்கள், 7,360 தற்காலிகப் பணியாளர்கள் என மொத்தம் 11,931 பணியாளர்களுக்கு முதற்கட்டமாக பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும் மூன்று மாதங்களுக்குள் இந்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும். மேலும், மாநகராட்சிப் பணியாளர்களில் உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் உள்ளிட்டவற்றிற்கு “மக்களைத் தேடி மருத்துவம்” திட்டத்தில் தொடர்ந்து மருந்துகள் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த முகாம்கள் இராஜீவ் காந்தி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் கலைஞர் நூற்றாண்டு பல்நோக்கு மருத்துவமனை

ஆகிய மருத்துவமனைகளில் முழு உடல் பரிசோதனை மேற்கொள்ள நாள் ஒன்றிற்கு ஒரு மருத்துவமனையில் 25 நபர்களுக்கு பரிசோதனை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேல்சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுகாதாரத்துறைக்கு அறிவித்துள்ள திட்டங்களுடன் இணைத்து சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மூலம் முழு உடல் பரிசோதனை மேற்கொள்ள கட்டணமாக ஒரு நபருக்கு ரூ.1000/- என நிர்ணயிக்கப்பட்டு, முதற்கட்டமாக 11,931 பணியாளர்களுக்கு ரூ.1,19,31,000/- பரிசோதனை கட்டணம் மாநகராட்சியின் மூலம் மருத்துவமனைக்கு செலுத்தப்படும். பரிசோதனையின் இறுதியில் ஒவ்வொருவருக்கும் பதிவு அட்டையில் அவர்களின் பரிசோதனை அறிக்கை, மருத்துவ அறிக்கை மற்றும் தொடர் சிகிச்சைக்கான ஆவணங்களும் அவர்களிடம் தரப்படும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி.ஜெய சந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர்கள் திரு.பி. ஸ்ரீராமுலு, திரு.நேதாஜி யு. கணேசன், மாமன்ற உறுப்பினர்கள் திரு.ல. நவீன், திருமதி மோ. ரேணுகா, மாநகர நல அலுவலர் டாக்டர் எம். ஜெகதீசன், அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் டாக்டர் பாலாஜி, மண்டல அலுவலர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி,**